2009 ஜூலை 1]

முற்பகல் 11-00

(ஏ) கேரள அரசு, பழுதடைந்துள்ள அணைக்குப் பதிலாக புதிய அணை கட்டப் போவதாக அறிவித்துள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஓராண்டு காலமாக எங்களுடைய மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி உள்ளிட்ட 5 மாவட்டங்களிலுள்ள விவசாயிகள் பதற்றமான சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஒரு மாத காலமாக கேரள அரசு, ஏற்கெனவே இருக்கிற அணை விரிசலாக இருப்பதாகவும், கீறலாக இருப்பதாகவும், புதிய அணையைக் கட்டப் போவதாகவும் பல அறிக்கைகளைப் பேப்பர்கள்மூலமாகவும், சட்டமன்றத்திலே அமைச்சர்மூலமாகவும், அதிகாரிகள்மூலமாகவும் அறிவித்துக் கொண்டேயிருக்கிறது. இதனால் எங்கள் மாவட்ட விவசாயிகள் எல்லாம் ஒரு பதற்றமான சூழ்நிலையில் இருக்கிறார்கள். அதைப்பற்றி விவாதிப்பதற்காகத் தங்களிடம் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். அதை எடுத்து விவாதிக்க அனுமதிக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

(ஏ) திருப்போரூர் முருகன் கோயில் குளத்தில் தவறி விழுந்து இறக்கும் குழந்தைகள் குடும்பத்திற்கு நிவாரணம்–குளத்தைச் சுற்றி வளையம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

***திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், எனது திருப்போரூர் தொகுதியில் அமைந்துள்ள திருப்போரூர் முருகன் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருக்குளத்தில், ஒவ்வொரு மாதமும் 3 குழந்தைகளாவது தவறி விழுந்து, இறக்கின்றார்கள். அப்படி இறக்கும் அந்தக் குழந்தைகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்கவேண்டும். அதேபோன்று, அந்தக் குளத்தில் ஆண்டு முழுவதும் நீர் நிரம்பியுள்ள காரணத்தினாலே, படிகளில் உள்ள பாசிகளால் வழுக்கி விழுகிற காரணத்தினால், பாதுகாப்புக் கருதி, அந்தக் குளத்தைச் சுற்றி வளையம் அமைக்கப்படுமா எனத் தங்கள்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS